**ஒதுக்கீட்டுத் தலைப்பு – 265**

**மாவட்டச் செயலகம், மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் கணக்குகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2010

## 1. மாவட்டச் செயலகத்தின் முக்கிய பணிகள்

- அரசாங்கப் பணிகளை ஒருங்கிணைத்தலும் மாவட்ட மற்றும் கிராமிய மட்டத்தில் காணப்படும் நிறுவனங்கள், உத்தியோகத்தர்கள் ஊடாக சட்டத்தினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகளைப் ஆற்றுதலும்.
- ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் முகவராக செயற்படுதல்
- வருமானத்தினை சேகரித்தல்
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டத்தினையும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகளையும் அமுலாக்குதல்
- மாகாணசபைக்கு அதன் செயற்பாடுகளில் உதவுதல் மற்றும் அதன் வெளிநாட்டு நிதியளிப்புச் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
- அரசு சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள்

- பிரதேச செயலகம், மன்னார்
- பிரதேச செயலகம், நானாட்டான்
- பிரதேச செயலகம், முசலி
- உதவி அரசாங்க முகவர் அலுவலகம், மடு
- உதவி அரசாங்க முகவர் அலுவலகம், மாந்தை மேற்கு

## 3. வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மாவட்டச் செயலகம் கணக்காண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்திருந்தது.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த ஏற்பாடும், செலவினமும்

மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் 03 பிரதேச செயலங்கள் மற்றும் 02 உதவி அரசாங்க முகவர் அலுவலகங்களிற்கான மொத்த நிதி ஏற்பாடு ரூபா 125,439,000 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 122,501,750 பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் மாவட்டச் செயலகம், அதன் கீழ் இயங்கும் பிரதேச செயலங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களின் தேறிய சேமிப்பு ரூபா 2,937,250 ஆனதுடன் இது தேறிய ஏற்பாட்டில் 2.34 சத வீதமாக காணப்பட்டது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | வருடாந்த மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | மொத்த தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| மீண்டுவரும் | 90,950,000 | 92,389,000 | 92,336,701 | 52,299 | 0.06 |
| மூலதனம் | 33,050,000 | 33,050,000 | 30,165,049 | 2,884,951 | 8.73 |
| மொத்தம் | **124,000,000** | **125,439,000** | **122,501,750** | **2,937,250** | **2.34** |

### 4.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து கிடைத்திருந்த ஏற்பாடுகளின் பயன்பாடு

பல்வேறு நோக்கங்களிற்காக வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களிடமிருந்து கீழே காட்டப்பட்டவாறு ரூபா 650,717,163 நிதி ஏற்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவ் ஏற்பாடுகளின் பயன்படுத்தல் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு இலக்கம் | ஏற்பாடுகள் கிடைத்திருந்த அமைச்சு/திணைக்களம் | ஏற்பாடுகள் | உண்மையான செலவினம் | சேமிப்புகள் (2010 திசெம்பர் 31 இல்) |
| --- | --- | --- | --- | --- |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| 17 | தேர்தல்கள் திணைக்களம் | 13,995,921 | 6,431,990 | 7,563,931 |
| 103 | பாதுகாப்பு அமைச்சு | 16,000 | 9,583 | 6,417 |
| 105 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 302,666,419 | 280,724,991 | 21,941,428 |
| 106 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 5,403,900 | 3,772,963 | 1,630,937 |
| 118 | கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சு | 138,500 | 64,222 | 74,238 |
| 120 | சிறுவர் அபிவிருத்தி பெண்கள் வலுவூட்டல் அமைச்சு | 7,042,870 | 6,996,724 | 46,146 |
| 121 | பொது நிர்வாக, உள்நாட்ட லுவல்கள் அமைச்சு | 133,735 | 104,260 | 29,475 |
| 124 | சமூக சேவைகள் அமைச்சு | 9,813,760 | 8,333,402 | 1,480,358 |
| 133 | விஞ்ஞான கைத்தொழில் அமைச்சு | 5,538,226 | 5,448,188 | 90,038 |
| 145 | மீள்குடியேற்ற அமைச்சு | 95,045,186 | 82,555,188 | 12,489,304 |
| 152 | நிர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு | 24,900 | 6,910 | 17,990 |
| 153 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 446,390 | 421,909 | 24,481 |
| 160 | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு | 35,000 | 34,882 | 118 |
| 174 | புனரமைப்பு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | 3,700,000 | 1,887,500 | 1,812,500 |
| 217 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு திணைக்களம் | 820,055 | 813,765 | 6,290 |
| 218 | சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 1,526,240 | 1,053,572 | 472,668 |
| 252 | குடிசன மதிப்பு புள்ளவிபரவியல் திணைக்களம் | 889,510 | 720,818 | 168,692 |
| 253 | ஓய்வூதியத் திணைக்களம் | 202,789,051 | 168,802,021 | 33,987,030 |
| 254 | பதிவாளர் நாயகத் திணைக்களம் | 350,000 | 338,058 | 11,492 |
| 307 | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 341,500 | 189,826 | 151,674 |
| | மொத்தம் | 650,717,163 | 568,710,772 | 82,005,207 |

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை

மன்னார் மாவட்டச் செயலகத்தின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பதிவேடுகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், ஏடுகள் மற்றும் ஏனைய பதிவேடுகள் அடங்கலான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு/கணக்குகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(I) ஆம் உறுப்பிரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 ஓகஸ்ட் 01 ஆந் திகதி மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களினது மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

## 4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்பிரைகள் மற்றும் பொது நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களிற்கு அமைவாக பேணுதல், தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. மோசடிகள் அல்லது வழுக்கள் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும், அமுலாக்கலும், அதனைப் பேணுதலும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவுசெய்து பயன்படுத்துவதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரிப்பதும் இப் பொறுப்பினுள் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கணக்குகள் மற்றும் புத்தகங்களிற்கு அமைய கீழ் வரும் (அ) தொடக்கம் (ஈ) ஆம் பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பொதுவான அவதானிப்புக்கள் மற்றும் 4.6 தொடக்கம் 4.12 வரையிலான பந்திகளில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர, மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

### (அ). கணக்குகளைச் சமர்ப்பித்தல்

மாவட்டச் செயலகம் 2011 மார்ச் 31 அளவில் பின்வரும் கணக்குகளைச் சமர்ப்பித்திருந்தது.

| தலைப்பு இலக்கம் | கணக்குகளின் பெயர் | சமர்ப்பித்த திகதி |
|---|---|---|
| 265 | ஒதுக்கீட்டுக் கணக்கு | 2011 மார்ச் 30 |
| 26501 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு | 2011 மார்ச 24 |

(i) மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணிவராதிருந்தமையும் இன்னும் சில பதிவேடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவராதிருந்தமையும் கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளில் அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | தொடர்புடைய விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கு அமைவாக இப் பதிவேடுகளைப் பேணிவருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (ஆ) | கணனிகள், துணைச் சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | |
| (ஈ) | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | |

(ii) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த முறையே 05 மற்றும் 01 கணக்காய்வு ஐய வினாக்களிற்கு இவ்வறிக்கைத் திகதி வரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) கட்டுநிதிக் கணக்கு

(i) நிதிப்பிரமாணம் 371 இன் ஏற்பாடுகளிற்கு முரணாக உப கட்டுநிதிகள் நோக்கம் நிறைவேற்றப்பட்ட பின்னர் 15 தொடக்கம் 131 நாட்கள் வரை தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன.

(ii) நிதிப்பிரமாணம் 371 இற்கு முரணாக பதவிநிலைத் தரத்தினைச் சாராத மாவட்டச் செயலகத்தின் சில உத்தியோகத்தர்களிற்கு முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## (இ) பொதுவைப்புக் கணக்கு

02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மொத்தம் ரூபா 7,365,877 ஆன வைப்புக்கள் மீது நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள் கணக்கிணக்கக் கூற்று**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கிணக்கக் கூற்றின் படி 2010 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாயிருந்த மீதிகளின் மொத்தம் ரூபா 317,272 ஆக இருந்ததுடன் நிலுவையாகவுள்ள மீதிகளை அறவிடுதல் மீதான நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருக்கக் காணப்பட்டன.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தாதும் அல்லது குறைவாகப் பயன்படுத்தியுமிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தாது அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி |
|---|---|---|---|
| i. | மோட்டார் வாகனங்கள் | 03 | 03 |
| ii. | இயந்திரங்கள் (மின்பிறப்பாக்கி) | 04 | 04 |

**(ஆ) வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபையினை நடாத்தல்**

நி.பி. 756 மற்றும் 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலாளரினால் பொருட் கணிப்பீட்டுச் சபையினைத் தாபித்து நடாத்துவதற்கும் அதன் அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும் 2011 ஏப்ரல் 30 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தில் ஒரு வருடத்திற்கும் குறைவான காலப்பகுதியில் நிலவிய தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 170,618 ஆகும்.
பின்வரும் அவதானிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

## 4.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்டச் செயலகத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றனவையாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறன ஒரு சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) கொள்வனவுக் கைநூல் மற்றும் கொள்வனவு வழிகாட்டலின் 2.7.7 ஆம் பிரிவின் பிரகாரம் மன்னார் மாவட்டத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பிராந்திய கொள்வனவுச் சபைகள் தாபிக்கப்படாதிருந்தன. மாறாக, பிரதேச செயலாளர்கள் கொள்வனவுச் சபைகளை நியமித்திருந்தனர்.

(ஆ) வழங்குனர்களை தெரிவு செய்வது தொடர்பில் உத்தம மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அனேக சந்தர்ப்பங்களில் பிரதேச செயலகம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) வாகனமொன்றை திருத்தி வர்ணம் தீட்டுவதற்கு ரூபா 280,500 செலவிடப்பட்டிருந்தது. மாவட்டச் செயலகத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகரின் வேலை முடிவுறுத்தற் சான்றிதழின் படி, இம் மோட்டார் வாகனம் கராஜிலிருந்து 211 மார்ச் 07 ஆந் திகதியன்றே விடுவிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மேற்படி வேலைகளை முடிவுறுத்த முன்னர் 2010 திசெம்பர் 31 இல் முழுமையாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) இயந்திர அறை, பாதுகாவலர் ஓய்வு அறை மற்றும் நாய்க்கான அறையொன்றிற்காக ரூபா 385,863 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. கேள்வி ஆவணங்கள் மற்றும் ஒப்பந்தகாரருடனான உடன்படிக்கையின் பிரகாரம் இயந்திர அறை ஒன்றை மாத்திரம் நிர்மாணிப்பதற்கு தீர்மானித்திருந்த போதிலும், அதற்கும் மேலாக எவ்வித நோக்கமோ வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடோ இன்றி ஓய்வு அறை ஒன்றும் நாய்க்கான அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தமை பௌதீக மெய்மையாய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், பொறியியலாளரின் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் உள்ளபடியான செலவினம் ரூபா 117,461 ஆல் மிகைத்திருந்தது.

(உ) முறையான அங்கீகாரமின்றி நெற் கொள்வனவிற்கான முற்பணத் தொகையான ரூபா 98,632 குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) மாதிரி விலைப்பட்டியல்கள் மற்றும் சிட்டைகளின் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 253,942 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(எ) 2010 திசெம்பர் 31 இல் ரூபா 40,460 செலுத்தப்பட்டிருந்த போதிலும், சிட்டைகளின் மீதான திகதிகள் 2011 சனவரி 07, 10 மற்றும் 17 ஆக காணப்பட்டன.

## 4.8 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகள்

வழங்கப்பட்டும் 6 மாதங்களிற்கும் மேலாக கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 1,745,645 பெறுமதியான 73 காசோலைகள் தொடர்பான 2010 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த சீராக்கல்களின் பகுப்பாய்வில் தகவல்கள் வெளிப்பட்டன.

## 4.9 இணங்கி ஒழுகாமை

### (அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்கி ஒழுகாமை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்கி ஒழுகாமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இனங்கி ஒழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| நிதிப்பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 751 | பெறுமதியினை மதிப்பிட முடியாதுள்ளது | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பத்து விடயங்கள் இருப்புப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. 05 விடயங்களை விநியோகிப்பது தொடர்பில் வழங்கல் மற்றும் பெறுவனவுக் கட்டளைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 1645 | பெறுமதியினை மதிப்பிட முடியாதுள்ளது | நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. |
| சுற்றறிக்கை ஏற்பாடுகள் | | |
| திறைசேரிச் சுற்றறிக்கைகள் | | |
| (அ) 2006 மார்ச் 24 ஆந் திகதிய 28 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பெறுமதியினை மதிப்பிட முடியாதுள்ளது | 2010 ஆம் ஆண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | - | 84,456 | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (அ) 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | | - | 2010 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கைகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| தாபனவிதிக் கோவை | | | |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | | 71,303 | பதவி வறிதாக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) வரித் தேவைப்பாடுகளுடன் இணங்கி ஒழுகாமை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின் போது அவதானிக்கப்பட்ட வரித் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டத்தின் 153 ஆம் பிரிவின் ஏற்பாட்டிற்கு முரணாக ரூபா 280,500 ஆன மொத்தக் கொடுப்பனவில் வழங்குனரிடமிருந்து 5% நிறுத்திவைத்தல் வரியான ரூபா 2,275 அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4.10 செயற்திட்டங்களை அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் வெளிப்பட்ட தொடங்கப்படாது கைவிடப்பட்ட செயற்திட்டங்கள், முடிவுறுத்தாது இடைநடுவே கைவிடப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் என்பன கீழே தரப்பட்டுகின்றன.

**செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

மாவட்டச் செயலகத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | தொடங்கப்பட்ட திகதி | முடிவுறுத்தப்பட வேண்டிய திகதி | திசெம்பர் 31 வரையான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| மாந்தை மேற்கு உ.அ.அ.அலுவலக கழிவரை நிர்மாணம் | 225,000 | 2010 ஒக்தோபர் 20 | 2010 திசெம்பர் 31 | 212,079 | மாவட்டச் செயலகத்தினால் போதிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சைக்கிள் மற்றும் வாகனத் தரிப்பிடம் | 710,000 | 2010 ஒக்தோபர் 31 | 2010 திசெம்பர் 31 | 456,656 | |
| உதவி அரசாங்க அதிபரின் புதிய வதிவிடத்தில் இயந்திர அறை | 4,514,000 | 2010 ஆகஸ்ட் 31 | 2010 திசெம்பர் 01 | 312,340 | |

## 4.11 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

மாவட்டச் செயலகத்தில் பேணிவரப்பட்ட தகவல்களிலிருந்து கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது ரூபா 2,760,000 பெறுமதியான இழப்புக்கள் மற்றும் சேதங்கள் வெளிப்பட்டன.

## 4.12 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையும் வெற்றடங்களும்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை நிலைவரம் வருமாறு

| **ஊழியர் வகை** | **அங்கீரித்த ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட மட்டம் | 32 | 19 | 13 |
| (ii) இரண்டாம் மட்டம் | 311 | 223 | 88 |
| (iii) ஆரம்ப மட்டம் | 51 | 36 | 15 |
| மொத்தம் | 394 | 278 | 116 |

## 4.13 உள்ளகக் கட்டுப்பாடு

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை அமுல்ப்படுத்தல்

2000 மார்ச் 15 ஆந் திகதிய பீஎப்/பீஈ/7 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.